## மே - 4

**"மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன். மனுஷன் முகத்தைப் பார்ப்பான். கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்." - 1சாமு 16 : 7.**

சித்தத்தின் நோக்காக தேவன் நம்மை மதிக்கிறார் என்ற உண்மையை மறந்துவிடுவோமானால், நாம் நம்மைப் பற்றியும் தேவன் நம்மைப்பற்றியும் அபிப்பிராயம் கொள்ளுகிறதை மாம்ச பிரகாரமாக எண்ணக் கற்றுக் கொண்டோமானால், நிச்சயமாகவே நாம் அதற்குச் சமமாக இருளிலும், குழப்பத்திலும், அதைரியத்திலும் பிரவேசிப்போம். அதற்குமாறாக, ஆவி அல்லது சித்தம் அதன் நீதியின் காரணமாக, உயிருடன் இருப்பதாக எண்ணப்படுகிறது என்று மறவாதிருப்போமாக. ஏனென்றால், அது தேவனோடு இணக்கமாக இருக்கிறது. ஆகையால் நமது ஜீவியத்தின் நடத்தையை அடக்கி ஆளும் சித்தம் அல்லது நோக்கம் சம்பந்தமாக ஒருபொழுதும் தளர்ச்சியற்றவர்களாக இருப்போமாக. ஆனால் ஏதாகிலும் தளர்ச்சி ஏற்படுமானால், அது சமமான ஆவிக்குரிய ஜீவியத்தின் அழிவை குறிக்கிறதென்று ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுவோமாக. சரியானதை விரும்ப (சித்தம் கொள்ள ) எப்பொழுதும் நம்மால் கூடும். வறையற்ற விதமாக விசுவாசமுள்ள சித்தத்தைவிட குறைவுள்ளதொன்றையும் கிறிஸ்துவில் தேவனால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்காது. **-Z ’03, 171(R 3200)**

ஒருவருடைய தீர்ப்பின் திட்ட அளவு அவருடைய குணத்தில் அதிகமானதை வெளிப்படுத்துகிறது. வெளிப்படையான தோற்றத்திலிருந்து சாதாரண மனுஷன் செய்கிற தீர்ப்பினால் அவனுடைய ஆழமில்லாத தன்மையும் தவறும் சான்றாகிறது. ஆனால் கோயேவா தேவனின் குணம் அவருடைய தீர்ப்பின் சட்டத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது. மேலான குறிப்பினால் மதிப்பிடுவதற்கு பதிலாக அவர் காரியங்களின் உண்மையினுள் ஊடுருவிச்சென்று என்னவாகத் தோன்றுகிறது என்பதிலிருந்து அல்லாமல், என்னவாக இருக்கிறது என்பதிலிருந்து அவர் தனது மதிப்பை உருவாக்குகிறார். எல்லாம் பார்க்கிற அவருடைய கண்ணுக்கு எல்லா காரியங்களும் அபட்டமாகவும், திறந்தும் இருக்கின்றன. கூடுமானவரை தோற்றத்தினாலல்லாமல், காரியங்களின் உண்மையினால் தீர்ப்புச் செய்வோமாக.

**- P ’33, 78, 79.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

உபா 10:17; 2நாளா 19:7; யோபு 34:19; 37:24; மத் 22:16; யோவா 7:24; அப் 10:34,35; ரோம 2:16; 2கொரி 10:7; கலா 2:6; எபே 6:8,9; கொலோ 3:25; யாக் 2:1-6.

**கோபுர வாசிப்பு : Z ’15, 88(R 5656).**

**வினாக்கள்:** இந்த வாரத்தில் நான் வெளித் தோற்றத்தின்படி தீர்ப்பளித்தேனா அல்லது உண்மையின்படியா? ஏன்? எப்படி? பலன் என்ன?